ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2308/22 - 2022 නොවැම්බර් මස 30 වැනි බදාදා - 2022.11.30

*2308/22 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154இ உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க மேல் மாகாண மோட்டார் வாகன நியதிச் சட்டத்தின் 129(1) ஆம் உட்பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் கட்டளை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154இ உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க மேல் மாகாண மோட்டார் வாகன நியதிச் சட்டத்தின் 129(1) ஆம் உட்பிரிவின் கீழ் மேல் மாகாண ஆளுநர் றொஷான் குணதிலக்க ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பின்வரும் கட்டளை இதன் மூலம் பிரசுரிக்கப்படுவதாக அறிவிக்கின்றேன்.*

**றொஷான் குணதிலக்க,**
ஆர்டப்பீ அன்ட் கார், வீஎஸ்வீ, யூஎஸ்பீ, பீஎச்டி (சிறப்பு),
எப்ஜஎம் (இலங்கை), என்டிசீ, பீஎஸ்சீ
விமானப்படையின் மார்ஷல்,
ஆளுநர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண சபைக் கட்டடம்,
மேல் மாகாண ஆளுநர் அலுவலகம்,
பத்தரமுல்லை,
*2022, நவெம்பர் 30.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**கட்டளை**

1. இந்தக் கட்டளை நடைமுறைக்கு வரும் தினத்திற்கு முன்னர், மேல் மாகாணத்தின் 1991 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க மேல் மாகாண மோட்டார் வாகன நியதிச் சட்டத்தின் கீழ் மேல் மாகாணத்தின் போக்குவரத்து விடயப் பொறுப்பு அமைச்சரால் தயாரிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 03 ஆந் திகதிய 1730/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட, 2011 ஆம் ஆண்டு மோட்டார் வாகனக் கட்டணங்கள் தொடர்பான கட்டளைகள் மற்றும் 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 1808/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட, 2013 ஆம் ஆண்டின் மோட்டார் வாகனக் கட்டணங்கள் தொடர்பான கட்டளைகளின் கீழ் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்த போதும் இந்தக் கட்டளை நடைமுறைப்படுத்தப்படும் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருமாறு போக்குவரத்து அமைச்சரினால் மோட்டார் வாகனச் சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 2306/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் கீழ் vi, vii ஆம் அட்டவணைகள் மற்றும் ix ஆம் அட்டவணையின் 12 மற்றும் 13 ஆம் பிரிவுகளின் கீழ் வரும் கட்டணங்கள், மேல் மாகாண சபை நிதியத்திற்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களாக வேண்டும்.

2. இந்தக் கட்டளையில் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் சொற்களுக்கிடையில் ஒவ்வாமை ஏற்படுமிடத்து, சிங்கள சொல்லே அதிகாரம் பெற வேண்டும்.

EOG 11-0349

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.